# தமிழ் மொழியில் தோன்றிய முதல் புதினம் – ஆதியூர் அவதானி சரிதம்

*முனைவர் கோ. சந்தனமாரியம்மாள்*
உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோவில்பட்டி

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5051

வேதநாயகம்பிள்ளை உரைநடையில் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம்தான் தமிழில் வெளிவந்த முதல் நாவல் (1879) என்று கூறப்பட்டு வருகிறது. இந்நூல் வெளிவருவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பே 1875இல் “ஆதியுர் அவதானி சரிதம்சுசு வெளிவந்துவிட்டது. இந்நூல் அம்மானைப் பாடல் வடிவைக் கொண்டது. இந்நூலின் பிரதி தமிழ்நாட்டில் கிடைக்கவில்லை. நூலாக வெளிவருவதற்கு சில ஆண்டுகளுக்கு முன் இலண்டன் சென்றிருந்த சிவபாதசுந்தரம் அவர்கள் அங்குள்ள பிரிட்டிஷ் மியுஷியம் நூலகத்தில் ஒரு பிரதியிருப்பதைக் கண்டு அதன் (Xerox) நகல் பிரதியொன்றைப் பெற்றுக் கொண்டு வந்தார். நூற்றுப் பன்னிரண்டு பக்கங்களைக் கொண்டதாக இப்புத்தகம், 1995-இல் தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டில்' முதல் தமிழ்ப்புதினம் என்று அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு விஜயா பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது.

சேஷையங்கார் இந்த செய்யுள் கதையை எழுதி, அதற்கான முன்னுரையில் தான் ஒரு நாவல் எழுதுவதாக அழுத்தமாகக் கூறியுள்ளார். மேலும், இவ்வாறு கூறும் நிலையில், மேற்கு நாடு களில் புதினமானது உரைநடையில் எழுதப்படுவது என்றும் ஆனால் தான் செய்யுளில் எழுதுவதாகவும் உறுதிபடக் கூறுகின்றார். எனவே, இதை நோக்கும்போது புதினம் என்ற புதிய கதை இலக்கிய வகையைச் செய்யுளில் எழுத முடியுமா? என்ற கேள்வி எழுகின்றது.

செய்யுளில் கதை சொல்வது என்பது தமிழ் மரபில் நீண்ட நெடுங்காலமாக இருந்துவரும் ஓர் இலக்கிய ஆக்க முறையே. இந்த மரபின் தொடர்ச்சியாக இன்னொரு செய்யுள் கதையை சேஷையங்கார் உருவாக்குகிறார். முன்னைய செய்யுள் கதைகளைப் போல விருத்தப்பாக்களில் அமைக்காமல் அம்மானைப்பாடல் வடிவத்தில் இக்கதையை அமைக்கின்றார். ஆக, தமிழ்க் கதை மரபில் இந்நூல் ஏதோ சில புதிய கூறுகளை உள்ளடக்கியுள்ளது என்பதில் ஐயமில்லை.

எனவே, இப்புதிய கூறுகளைத் தமிழ்க் கதைக் கவிதை மரபு சார்ந்த பின்னணியுடன் ஆராய்ந்து இதன் வகைமைப் பண்பை அடையாளம் காணும் நோக்கில் ஆய்வு அமைகிறது.

**கதை ஆக்கம் : நிகழ்ச்சிப்பின்னல்**

புதின இலக்கிய வகையின் வகைமைக் கூறுகள் முன்னைய கதைக் கவிதைகளிலிருந்து வேறுபடுவது பற்றிச் சென்ற இயலில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. புதின வகைமைக் கூறுகளை அடையாளம் காணும் நோக்கில் "ஆதியுர் அவதானி சரிதம்" என்ற செய்யுள் கதையின் வகைமைப் பண்புகள் இனி ஆய்விற்குட்படுத்தப்படுகின்றன. கதைப் புணர்ப்பு நிகழ்ச்சிகளின் இணைவில் எவ்வாறு பின்னப்பட்டுள்ளது என்பதை ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாகும். குறிப்பாகக் கதைக்குள் வருகின்ற நிகழ்ச்சிகள் எந்த அடிப்படையில் அமைகின்றன என்பதை இவ்வியல் ஆராய்கிறது. ஒப்பிடுவதற்கு எடுத்துக் கொண்ட உரைநடைப் புதினங்களின் நிகழ்ச்சிப் பின்னல்களோடு ஒப்பிட்டும் ஆராயப்படுகிறது.

**கதை**

பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ளது ஆதியுர் என்ற கிராமம். அக்கிராமத்தில் உத்தமன் என்ற பிராமணன் வசித்து வந்தான். அவன் மனைவி காந்தாரி, இவர்களின் மகன் வினையாளன், காந்தாரியின் தங்கை மானாவதி, மானாவதியின் கணவன் வெட்டுணி, பேராளுர் என்ற கிராமத்தில் கணக்கராகப் பணியாற்றுகிறான். இவன் தம்பி குண்டுணி, வெட்டுணியின் மகன் வீரப்பிடாரி. வீராப்பிடாரியின் கணவன் அழிகண்டன். வினையாளனுக்கு மூன்று வயதாகும்போது தந்தை (உத்தமன்) இறந்து விடுகிறான். கணவன் இறந்தவுடன், காந்தாரி மகனுடன் தங்கை மானாவதி வீட்டில் வசிக்கின்றாள். தங்கை குடும்பத்தினர் உண்மையான அன்பில்லாமல் பலவகையில் அவர்களை ஏமாற்றுகின்றனர். வினையாளனுக்குப் பத்து வயதானவுடன் புணூல் போடும் விழா நடக்கின்றது. இதில் கிடைத்த மொய்ப் பணத்தை வைத்து வீரப்பிடாரியின் திருமணத்தை நடத்தி முடிக்கிறார் வெட்டுணி. வினையாளன் படிப்பதைக் கண்டு பொறாமை கொள்கின்றனர் வெட்டுணியின் குடும்பத்தினர். அச்சிறுவனுக்குப் பல இடையுறுகளை விளைவிக்கின்றனர். இறுதியில் வீட்டை விட்டு வெளியேற்றி விடுகின்றனர். காந்தாரி தன் மகனுடன் சென்னை நகருக்குச் செல்கின்றாள். செல்லும் வழியில் வினையாளன் நோய்வாய்ப்படுகிறான். ஒரு மூதாட்டி அவர்களுக்கு உதவி செய்கின்றாள். பின்னர், காந்தாரி சென்னைக்குச் சென்ற சில நாட்களில் வெட்டுணிக்கு வேலை இல்லாமல் போய்விடுகிறது. குடும்பத்தினருடன் சென்னைக்குச் செல்கின்றார் வெட்டுணி. இச்சூழ்நிலையில் காந்தாரி நல்ல மனதுடன் அவர்களை ஆதரிக்கின்றாள்.

உறவினர்கள் மீண்டும் வினையாளனுக்குப் பல இடையுறுகளை ஏற்படுத்துகின்றனர். கங்குரெட்டி என்பவரின் உதவியால் சில மாணவர்களுக்கு வினையாளன் பாடம் சொல்லிக் கொடுக்கிறான். இதில் கிடைக்கும் வருமானத்தால் பச்சையப்பன் பள்ளியில் சேர்ந்து பயில்கிறான். பள்ளிப் படிப்பு முடிவடைகிறது. துரோணர் என்ற ஆசிரியர் மருத்துவக் கல்லூரியில் சேர்த்து விடுகின்றார். உடற்கூறு நுணுக்கங்களை முற்றிலும் அறிந்து கொள்ளும் திறமை கொண்ட வினையாளன் அது முதல் "அவதானி" என்றழைக்கப்படுகிறான். மருத்துவக் கல்லூரியில் பிணங்களை அறுப்பது ஒரு பிராமணன் செய்யக் கூடியதல்ல என்று உறவினர்கள் சண்டை செய்கின்றனர். காந்தாரியும் தன் மகனிடம் வெறுப்புக் கொள்கின்றாள். மகனுக்குத் திருமணம்

முடிக்க ஏற்பாடு செய்கின்றாள். பலரிடம் கடன் வாங்கி, வரதட்சணை கொடுத்து "பலாமுருடு" என்பவளை வினையாளனுக்குத் திருமணம் செய்து வைக்கின்றாள். தாயின் சொல்லைத் தட்ட முடியாமல் பலாமுருடுவை மனைவியாக ஏற்றுக் கொள்கின்றான். அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்தன. வினையாளன் முன்னேறுவதைக் கண்ட உறவினர்கள் பொறாமை கொள்கின்றனர். காந்தாரியும் உறவினர்களின் சொல் கேட்டு மகனுக்கு இடையுறு விளைவிக்கின்றாள். வினையாளனுக்கு மனைவியாலும் பல துன்பங்கள் ஏற்படுகின்றன. வேதனை மிகுந்த வாழ்க்கைச் சூழ்நிலையில் (அவதானி) வினையாளன் ஆதியுருக்குச் செல்கிறான். அத்துடன் தன் மூத்த மகனுடன் பல இடங்களுக்குச் செல்கிறான். வினையாளனின் மகனுக்கு உபநயனம் (புணூல் விழா) செய்ய காந்தாரி ஏற்பாடு செய்கின்றாள். மீண்டும் வினையாளன் சென்னைக்குச் செல்கிறான். அங்கு தேவதத்தை என்ற சத்திரிய குலக் கைம்பெண்ணைச் சந்திக்கிறான். இருவருக்குமிடையே காதல் ஏற்படுகிறது. வினையாளன் நோய் வாய்ப்படுகிறான். சிகிச்சைக்காக இருவரும் ஆதியுர் செல்கின்றனர். கிராமத்தவர் இருவரையும் ஒழுக்கம் தவறியவர்கள் என்று குற்றம் சாட்டுகின்றனர். இச்சூழ்நிலையைச் சரி செய்ய தேவதத்தையைச் சென்னைக்கு அனுப்பி வைத்து விடுகிறான். நோய் குணமாகிவிடுகின்றது. பின்னர் சென்னைக்கு வந்து தேவதத்தையுடன் இணைந்து பல இலக்கியங்களைப் படிக்கின்றான். உறவினர்களுடன் சேர்ந்து கொண்டு காந்தாரி அவதானியின் மகள் திருமணத்தை நடத்த நினைக்கிறாள். திருமணத்தில் சச்சரவுகள் ஏற்படுகின்றன. தேவதத்தையை வரவழைத்து, அவள் கையில் பொறுப்பை ஒப்படைக்கிறான் (வினையாளன்) அவதானி. அனைவரும் வியக்கும்படி திருமணம் நடக்கின்றது. திருமணத்தின் மூலம் அனைவரும் ஒன்று கூடுகின்றனர். ஆயினும், தேவதத்தையை "வைப்பாட்டி" என்றே கருதுகின்றனர். இதனைத் தடுக்க அவதானி அவளைத் திருமணம் செய்து கொள்கிறான்.

## கதைக்கரு

"ஆதியுர் அவதானி சரிதத்தில்" விதவை மணம், கலப்பு மணம், வரதட்சணைக் கொடுமை, சாதி ஒழிப்பு போன்ற பலகருக்கள் இடம் பெறுகின்றன. இருப்பினும் ஆசிரியர் விதவை மறுமணத்தை வலியுறுத்துவதை நோக்கமாகக் கொண்டே கதையைப் படைத்துள்ளார்.

> **"கைம்பெண் விவாகமிந்தக் காலத்தி லுண்டாச்சு**
> **அம்புவி எங்கு மதுவே தலையெடுக்கும்**
> **காலத்தியற்கை தனைக் கட்ட முடியாது"**
> ***(ஆ.அ.சரிதம் ப.111)***

என்று கதையின் இறுதியில் தன் நோக்கத்தைக் கூறி முடிக்கின்றார் சேஷையங்கார்.

## நிகழ்ச்சிப் பின்னல் : பொது விளக்கம்

கதைக்கு வடிவ அழகையும் முழுமைத் தன்மையையும் கொடுப்பது நிகழ்ச்சிப் பின்னலேயாகும். ஆசிரியர், தாம் கூற நினைக்கின்ற கருவிற்கு ஏற்றாற்போல் நிகழ்ச்சிகளை ஒருங்கே அமைத்துச் செல்லுதலாகும். எல்லாக் கதைகளிலும் செயல், பாத்திரம், சிந்தனை மூன்றும் கலந்து அமைந்திருக்கும். இந்த மூன்றையும் ஒருங்கிணைத்துக் கதையை நகர்த்திச் செல்வதாகப் பின்னல் அமைந்திருக்கும். சூழல் சார்ந்த செயல் மாற்றத்தை மையமாகக் கொண்டு அமையும் பின்னல் செயற்பின்னல் (Plot of Action) எனப்படும். ஒரு பாத்திரத்தினுடைய நடத்தை முறைகளில் ஏற்படுகின்ற மாற்றத்திற்கேற்ப அமைவது பாத்திரப் பின்னல் (Plot of Chararcter) எனப்படும்.

பாத்திரங்களினுடைய சிந்தனையிலும் கருத்திலும் ஏற்படுகின்ற அடிப்படையான மாற்றங்களைக் கொண்டிருக்குமானால் அது சிந்தனைப் பின்னல் (Plot of thought) எனப்படும்.1 இம்மூன்றில் ஏதேனும் ஒன்று இவ்வாறு முக்கியமான மையம் பெற்றிருந்தாலும் இதற்கேற்ப பிற இரண்டும் ஒருங்கிணைந்து செயல்படும். இந்நிகழ்ச்சிப் பின்னல் நடப்பியல் பாங்கில் அமையும்போது அம்முறைக்கேற்ப வேறுபட்ட அனுபவங்களை உருவாக்கும். பலவகை நிகழ்ச்சிகளின் வைப்பு முறை, ஆர்வ நிலையில் வியப்பு ஏற்படுத்தும் முறை, முதலும் இடையும் முடிவை நோக்கி இட்டுச் செல்லும் போக்கு இவையே நிகழ்ச்சிப் பின்னலின் முக்கிய அம்ச ங்களாகும். கதை இயங்கிச் செல்லுகின்ற முறையில் எதிர் எதிரான நிகழ்வுகளை அமைத்து ஆர்வ நிலையை ஏற்படத்து வதாகப் பின்னல் அமைந்திருக்கும். மர்மக் கதைகளிலும் ஆர்வநிலைகள் உள்ளன. அவை வெறுமனே மர்மப் புதிர் நோக்கியே அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் அவற்றைப் போல் அல்லாமல், சமூக வேர்களை மையங்கொண்டவையாக நாவலின் நிகழ்ச்சிப் பின்னலில் ஆர்வநிலை அமைந்திருக்கும். அந்த சமயத்தில் என்ன நடந்திருக்கும்? இனி என்ன நடக்கும்? என்ற எதிர்பார்ப்பையும் ஆர்வத்தையும் நிகழ்ச்சிப்பின்னல் தூண்டுவதாக அமைவதோடு நடப்பியல் பாங்கும் நிகழ்ச்சித் தேர்வுகளில் காணப்படும். இனி, ஆதியுர் அவதானி சரிதத்தின் நிகழ்ச்சிப் பின்னல் பற்றிக் காண்போம்.

### மூன்று முரண் இழைகள்

“ஆதியுர் அவதானி சரிதத்தில்” குடும்பத்தை மையமாகக் கொண்ட முரண் சார்ந்த சிக்கல்கள் நிகழ்ச்சிப்பின்னலுக்குரிய நிகழ்வுகளாக உள்ளன. அவற்றின் எதிர்எதிரான இயங்கு நிலையைக் கீழ்க் கண்டவாறு சுட்டலாம்.

1. நம்பிக்கை - நம்பிக்கைத் துரோகம்
2. தீண்டாமை - சமத்துவம்
3. மரபுத் திருமணம் (கட்டாயம்) - (விருப்பம்) காதல்

ஆகிய மூன்று முரண் இழைகளே கதை இயங்குநிலையில் ஆர்வநிலைகளைத் தோற்றுவித்துக் கதையை நடத்திச் செல்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாக இனிக் காண்போம்.

### 1. நம்பிக்கை - நம்பிக்கைத் துரோகம்

இது, வினையாளனின் தாயின் நம்பிக்கை உணர்வுக்கும், அதற்கு எதிரான உறவினரின் துரோகமுமாக புதினத்தின் இறுதி வரை அமைந்திருப்பது. கணவனை இழந்ததும் காந்தாரி, தன் மகன் வினையாளனுடன் தங்கை வீட்டிற்குச் செல்ல நேரிடுகிறது. அங்கு, காந்தாரி அவர்களுக்கு அடிமை போல் வேலைகள் செய்கின்றாள். கொழுநன்மார் பல இடையுறுகளை ஏற்படுத்துகின்றனர். மகனை வளர்க்க வேண்டுமென்ற காரணத்திற்காக அவற்றையெல்லாம் பொறுத்துக் கொள்கிறாள். தனக்கு இடையுறு ஏற்படுத்தினாலும் சிறுவனான தன் மகனைத் துன்புறத்த மாட்டார்கள் என்று நம்பியிருந்தாள். ஆனால், மகனையே துன்புறுத்துகிறார்கள் என்பதையறிந்தவுடன் வேதனையடைகின்றாள். கொழுநனாகிய வெட்டுணியிடம் கூறி முறையிடுகின்றாள்.

> **“பட்டேனே நானுமக்குப் பாரிமணஞ் செய்துவைத்தேன்**
> **கனியுமென் நன்மகனைக் கைதூக்கி நீர்விடுவீர்**
> **இனிக்குறை யில்லையென்று மெண்ணமிட்டு நானிருக்க**
> **அழிகண்டனுன் மருகன் ஆகாத குண்டுணியும்**
> **பழிகார ரென்மகனைப் பார்க்கச் சகியாரே.”**

**(ஆ.அ.சரிதம் ப.9)**

தன் மகனைப் பார்த்துக் கொள்வார் வெட்டுணி என்ற நம்பிக்கையினால் தங்கை மானாவதியை அவருக்குத் திருமணம் செய்து வைக்கின்றாள். “இனிமேல் குறையில்லையென்று நானிருந்தேன்.

ஆனால் உங்கள் தம்பி குண்டுணியும் மருமகன் அழிகண்டனும் என் மகனைப் பார்க்கச் சகிக்க மாட்டேன் என்கிறார்களே!" என்று வெட்டுணியிடம் கூறுகின்றாள். அவள் சொல்வதைக் கேட்பதுபோல் இருந்துவிட்டு, செய்கின்ற தவறை அவர்கள் செய்து கொண்டுதான் இருந்தனர்.

வினையாளனுக்குப் புணூல் போடும் விழாவிற்கு ஏற்பாடு செய்கின்றார் வெட்டுணி. தன் மகள் வீரப்பிடாரியின் திருமணத்தையும் இத்துடன் சேர்த்து நடத்திவிடலாம் என்பதே அவரின் உள்நோக்கம். தனக்கோ தன் தம்பிக்கோ எந்தவிதச் செலவும் கிடையாது. வருகின்ற மொய்ப் பணத்தையும் எடுத்துக் கொள்ளலாம் என்பதே அவரின் நோக்கமாகும். புணூல் விழாவிற்காக விரைவில் பணம் சேர்க்கும் படி காந்தாரியிடம் கூறுகின்றார். அவரும் காந்தாரியின் பெயரைச் சொல்லி அறிந்தவர் தெரிந்தவர்களிடத்தில் கடன் வாங்கிப் பணத்தைக் குவிக்கின்றார்.

**"நயமா யிரண்டுணியும் நற்சகுனங் கண்டுகொண்டு**
**குப்புசெட்டி யப்புசெட்டி குண் டுபிள்ளை நாகலிங்கம்**
**சுப்புபிள்ளை ரங்கராயன் சோமாசிப் பட்டன்முதல்**
**உண்டான பேர்களிடம் ஓயாமற்றா னடந்து**
**கண்டு கெஞ்சிக்கூத்தாடிக் காலரைகள் தாம்பிடுங்கி**
**குண்டுணி யுமண்ணனுமாய்க் கூடை பணங்குவித்தார்**
**கண்டுள்ளே காந்தாரி கண்கலக்கங் கொண்டிருந்தாள்."**

**(ஆ.அ.சரிதம் ப.8)**

நல்ல சகுணம் நமக்கென்று நினைத்த வெட்டுணியும் குண்டுணியும் விழாவிற்கு ஏற்பாடு செய்தனர். வெட்டுணியின் மகள் வீரப்பிடாரிக்கும் அந்நாளில் திருமணம் நடக்கின்றது. வினையாளனுக்குப் புணூல் போடுவதற்கு வந்த மொய்ப்பணத்தையெல்லாம் அவர்கள் கணக்குக் காட்டவில்லை. தங்கள் எண்ணம் நிறைவேறியவுடன் காந்தாரியையும் வினையாளனையும் வீட்டை விட்டு வெளியேற்றத் திட்டம் தீட்டுகின்றனர். காந்தாரியிடம், உனது மகன் கால் வைத்த நாளிலிருந்து குடி கெட்டு விட்டது. கூழுக்கு அழுகின்ற நிலமையை ஏற்படுத்தி விட்டாயே நிர்மூடி என்று கூறி, வீட்டை விட்டு வெளியேறு என்கிறார் வெட்டுணி. இவ்வாறு கூறுவதைக் கேட்ட காந்தாரி,

**"பிள்ளைக்கு நல்ல பிடிப்பென் றிருந்தேனே**
**கள்ளத் தனத்தையிப்போ காட்டினையே சண்டாளா**
**என்ன கதியடைவாய் ஈசனாரில் லையோடா**
**பின்னைத் தெரியுமடா பேதையென் ச ாபமென்று**
**சாபமிட் டன்னை தனையனொடு வீடுவிட்டுத்**
**தூபமிட்ட பேய்போலத் தூரவழி தானடந்தாள்."**

**(ஆ.அ.சரிதம் ப.11)**

பிள்ளைக்கு நல்ல பிடிப்பாய் இருப்பாய் என்று நம்பி வந்தேன். ஆனால், உன் கள்ளத்தனத்தை இப்போது காட்டிவிட்டாய் என்று கூறி, காந்தாரி மகனுடன் வீட்டை விட்டு வெளியேறி விடுகின்றாள். நம்பிக்கையோடு தங்கை வீட்டிற்கு வந்த தாயும் மகனும் ஏமாற்றப்பட்டு வெளியேற்றப்படுகிறார்கள். காந்தாரியின் இவ்வெளியேற்றம் கதை இயக்கத்தில் ஆர்வநிலையை ஏற்படுத்திவிடுகின்றது.

கொழுநன் வீட்டை விட்டு வெளியேறிய காந்தாரி சென்னையில் குடியேறுகின்றாள். வேலையில்லாமல் போய்விட, வெட்டுணியும் குடும்பத்தினருடன் சென்னைக்கு வருகின்றார். தனக்குச் செய்த துன்பங்களையெல்லாம் மறந்து, காந்தாரி தன் குடும்பத்துடன் அவர்களை இணைத்துக் கொள்கின்றாள். மீண்டும் காந்தாரியின் நம்பிக்கையைக் காணமுடிகிறது. வந்தவர்கள் சும்மா இருக்கவில்லை. அவரவர் தீமைபுரியும் பணியில் ஈடுப்பட்டனர். வினையாளன் வளர்வதனைப் பார்த்துப் பொறாமை கொள்கின்றனர்.

**"குழை கன்றுபோலக் குலவி வளர்வதனைப்
பார்த்துச் சகியாமல் பாலனிருப் பறிந்து
வேர்த்து மனம்புழுங்கி வீங்கிற் பயலுமிப்போ
நோஞ்சிற் பயலுமிப்போ நோக்கப் பகட்டாக
வாஞ்சையாய் முண்டை வளர்க்கப் பருத்தானே
என்றிந்த வண்ண மெரிந்துள நொந்தார்கள்
நன்றி சுட்டுத் தீமையது நாளும் புரிந்தார்கள்."
(ஆ.அ.சரிதம் ப.15)**

வீட்டை விட்டு அவர்களை விரட்டியடித்தோம். பல கொடுமைகள் செய்தோம். அவற்றையெல்லாம் மறந்து நம்மை ஆதரிக்கின்றாளே! என்ற நன்றியுணர்வு வெட்டுணி குடும்பத்தினரிடம் இல்லை. குண்டுணியும், அழிகண்டனும் வினையாளன் பள்ளிக்குச் சென்று வரும் நேரம் மறைந்திருந்து அடிப்பர். ஆனால் பழியை வினையாளன் மீது கூறுவர். பழைய பகையை வினையாளன் மறக்கவில்லையென்றும், வேண்டுமென்றே தங்கள் மீது பழிபோடுகிறான் என்றும் காந்தாரியிடம் கூறுகின்றனர். உறவினர்கள் மீது நம்பிக்கை கொண்ட காந்தாரி மகனை அடிக்கின்றாள். "தந்தை பெயரைக் கெடுக்கப் பிறந்தாயே" என்று கூறுவாள். "பொல்லாத பிள்ளை நீ இல்லாமற் போனாலும் ஏக்கமற்று நானிருப்பேன்" என்று தலையிலடித்துக் கொண்டு அழுவாள். (ப.18) உறவினர்கள் தீங்கு செய்தாலும் அவர்களை நம்பி மோசம் போகின்றாள் காந்தாரி. காந்தாரியின் நம்பிக்கைக்கு எதிரான இந்தத் துரோகமே கதை நிகழ்வுகளின் இயக்கத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

வினையாளனின் திருமணத்தில் உறவினர்கள் கூடுகின்றனர். அப்போதும் கலகத்தையே உண்டுபண்ணுகின்றனர். காந்தாரியின் மருமகள் பலாமுருடுவிற் குச் சீமந்தம் நடக்கின்றது. காந்தாரி உறவினர்களை அழைக்கும்படி மகனிடம் கூறுகின்றாள். எதிர்பாத்த்திருந்தவர்கள் போல் வெட்டுணியின் குடும்பத்தினர் சீமந்தத்திற்கு வருகின்றனர். காந்தாரி மீண்டும் அவர்களை நம்பி தான் கடன்வாங்கி வைத்திருந்த பணத்தை வெட்டுணியின் கையில் கொடுத்து செலவு செய்யச் சொல்கின்றாள். கயவர்களின் மனதை அறியாக் காந்தாரியும் அவர்களுக்கு இணங்கி நடக்கின்றாள். மதனி, உன் தங்கை பிள்ளைகள் உன் பிள்ளைகள் தானே! நாம் இனி ஒரு குடும்பமாக இருப்போம் என்கிறார் வெட்டுணி. காந்தாரியும் இச்சொல்லை நம்பி ஒப்புக் கொள்கின்றாள். ஆனால், மாமியார் மருமகளிடையே வெட்டுணி குடும்பத்தினர் கலகத்தை மூட்டுகின்றனர்.

**"குடும்பங் கலைக்கவல்ல கோளனழி கண்டனுடன்
விடுபட்டி யாய்த்திரியும் வீரப் பிடாரியும்
கங்கணங் கட்டிக் கலகம் விளைக்கலுற்றார்
மாமி மருமகளும் மல்லுக்கு நிற்க வைத்தார்
கெக்காலி கொட்டியவர் கேலியது பண்ணிவிட்டார்." (ஆ.அ.சரிதம் ப.55)**

காந்தாரியும், பலாமுருடுவும் சண்டையிட்டுக் கொள்வதைப் பார்த்துச் சிரிக்கின்றனர். இவர்களின் தீய செயல்கள் இதுபோல் கதையின் இறுதிவரைத் தொடர்கின்றன. பெற்ற மகனைவிட காந்தாரி உறவினர்கள் மீதே அதிக நம்பிக்கை கொண்டிருந்தமையைக் காணமுடிகிறது. அவளின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக அவர்கள் நடந்து கொள்ளவில்லை. மாறாக அவளின் குடும்பத்திற்குத் தீமைகளையே புரிகின்றனர். நம்பிக்கைக்கும் துரோகத்துக்குமான மோதலை இங்கு காணமுடிகின்றது.

மேற்குறித்த நிகழ்வுகள் எதிர் எதிரான இரண்டு குணங்கள் சார்ந்தவையாக கதை இயக்கத்தில் முக்கியப் பகுதியாக அமைகிறது. கதை இயக்கத்தில் மோதலோடு கூடிய ஆர்வநிலையை உருவாக்கும் கூறாக இந்நிகழ்வுகளின் எதிர்எதிர் இயக்கம் அமைந்துவிடுகிறது.

**தீண்டாமை - சமத்துவம்**

இரண்டாவதாகக் காணப்படும் இன்னொரு எதிர்எதிர் இயக்கம், சமூகச் சார்பு கொண்டு கதை நிகழ்வுகளாக அமைந்து கதையை நடத்துகிறது. கால மாறுதலில் வினையாளனுக்கு ஏற்படும் புதிய அனுபவங்கள் சார்ந்து இந்த எதிர் எதிர் இணை இயக்கம் அமைந்துள்ளது. சென்னைக்கு வந்தபின், வினையாளன் கங்குரெட்டி என்பவரின் மூலம் சில குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து வருகிறான். அதில் வரும் வருமானத்தை வைத்துக்கொண்டு, பச்சையப்பன் பள்ளியில் சேர்ந்து பயில்கிறான். பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் மேற்கொண்டு படிக்க எண்ணுகிறான். இந்நிலையில் துரோணர் என்ற ஆசான் அவனுக்கு உதவி செய்கிறார். அவர் செய்த உதவியின் மூலம் மருத்துவம் படிக்க நேரிடுகிறது. இங்குதான் சிக்கல் உருவாகின்றது. உறவினர்கள் மட்டுமே இவன் படிப்புக்கு இடையுறாக இருந்தனர். அவன் மருத்துவப் படிப்புக்குச் செல்கிறான் என்றவுடன் அவ்வுர் பிராமண சமூகமே எதிர்கின்றது.

> **"ஆய்ந் தறியும் வேளை அவனிப் பிராமணர்கள்**
> **வாய்ந்த மதக் குறும்பால் வண்மையில் மத்திமர்கள்**
> **ஈங்கிவர்கள் பொங்கி யெழுந்தாரே மேல்வெகுண்டு**
> **ஆங்காரத் தோடே அவதானி முன்திரண்டு**
> **உன்சாதி யென்ன உறுகுடியின் கீர்த்தியென**
> **புன்சாதி செய்யும் புழுக்கைத் தொழிலிழைத்துச்**
> **சாதி கெடுக்குஞ் சதிகாரா வெங்கிருந்தாய்**
> **நீதி மதந்துறந்து நீங்கினாற் றோஷமில்லை**
> **பிணந்தின்னி யன்றோ பிணமறுத்துச் சோதிப்பான்**
> **பிணந்தீண்டத் தீட்டுப் பிடியாதோ பார்ப்பானை**
> **பார்ப்பானோ நீயும் படித்த பறையனென்றார்."**
> ***(ஆ.அ.சரிதம் ப.23)***

என்று பிராமணர்கள் ஒன்று கூடி எதிர்க்கின்றனர். பிராமண சமூகத்தைச் சேர்ந்த ஒருவன் மருத்துவம் பயின்று பிணம் அறுப்பதா? உடல் இழிந்தது என்று கருதும் மரபானதத்துவப்பார்வையோடு இணைந்த தீண்டாமை உணர்வு அவர்களிடம் வெளிப்படுகிறது. அதுவே ஒரு தனி நபரின் புதிய நடத்தை மாறுதலை எதிர்க்கும் சக்தியாகிறது. பிணம் அறுத்தலாகிய தொழில் புழுக்கைத் தொழில் என்று உயர்சாதியினரால் கருதப் பெற்ற சமுதாய நிலை இங்கு வெளிப்படுகிறது. அந்தணர் குலத்தில் பிறந்த வினையாளன் பிணம் அறுக்கும் தொழிலை மேற்கொள்வது சாதி கெடுக்கும் செயலாகச் சமுதாயத்தினரால் கருதப்படுகிறது. பிணத்தை அறுப்பதனால் தீட்டு ஏற்படும் என்ற தீண்டாமை எண்ணமும், அதற்கு எதிரான வினையாளனின் செயல்பாட்டையும் காணமுடிகிறது.

நம்பிக்கை, நம்பிக்கைத் துரோகம் என்ற எதிர் எதிர் நிகழ்வுகள் கதையின் தொடக்கத்திலிருந்தே இயங்கி வரும்போது, தீண்டாமை சார்ந்த இந்த மோதலும் இடையில் கதை நிகழ்வில் இணைகிறது. எனவே, கூடுதலான எதிர்பார்ப்பும் ஆர்வநிலையும் கதை இயங்கு நிலையில் உருவாகிவிடுகிறது.

**மரபுத் திருமணம் (கட்டாயம்) - காதல் (விருப்பம்)**

மூன்றாவதாகக் காணப்பெறும் கூறு மரபுத் திருமணத்திற்கும் (கட்டாயத் திருமணத்திற்கும்) காதலுக்கும் இடையிலான மோதலாகும் அல்லது முரணாகும். உறவினர்களையும், பிராமண சமூகத் தினரையும் எதிர்த்துக் கொண்டு அவதானி மருத்துவனாகிறார். சாதிக்கடுக்காத செயல்புரிந்ததாகச் சமூகத்தினர் பழி தூற்றுகின்றார்கள். ஊர் வாயை மூட வேண்டுமெனில் விரைவில் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்று தாய்

எண்ணுகிறாள். உறவினர்களும் திருமணத்தில் கூடிவிடுவர். சாதியாரும் தாமே அடங்கிப் போய்விடுவார்கள் என்பது தாய் காந்தாரியின் எண்ணம், பெண் தேடி அலைகின்றாள். ஆகாவழி, போகாவழி ஆகியோரின் மகள் பலாமுருடுவை மணம்பேசுகின்றாள். அவர்கள் பெண்ணிற்கு வரதட்சணை கொடுக்கும்படி கூறுகின்றனர்.

**"இருநூறு ரூபாய்நீ யென்கையிற் போட வேண்டும்**
**இருநூறு ரூபாய்க்கும் ஏற்றநகை புட்ட வேண்டும்**
**கலியாண முங்கள் கணக்கிலே சே ரவேண்டும்**
**சலியாமல் நாங்களும் பெண்தன்னை யளித்திடுவோம்" *(ஆ.அ.சரிதம் ப.29)***

என்று பெண்வீட்டார் கூறியதும், காந்தாரி அதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றாள். அறிந்தவர், தெரிந்தவர்களிடத்திலெல்லாம் சென்று கடன்வாங்கித் திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றாள். காந்தாரியின் செயலைக் கண்ட அவதானி தற்போது திருமணம் வேண்டாம் என்கிறார். பெண் வீட்டாரின் செயல்பாடுகளும் பிடிக்கவில்லை. பெண்ணும் தனக்கு ஏற்றவளில்லை என்கிறார். பிடிவாதம் கொண்ட பெண்ணைத் திருமணம் செய்தால், சாவளவும் தடுமாற்றம் தான் என்று தாயிடம் கூறுகின்றார். "மனது கனியவில்லை மாதா நீ செய்யும் மணம் இனிதாகத் தோன்றவில்லை." *(ப.33)* என்கிறார். மகன் பேச்சைக் கேட்டதும் பிடிவாதம் கொண்ட காந்தாரி, தாய் சொல்லைக் கேளாத நீ பிழைத்தென்ன லாபம்! என்று வசைபாடுகின்றாள். *(ப.34)* பின்னாளில் வரும் தீமையை எண்ணி முன்பாக நல்லது சொன்னால் என்மேல் கோபம் கொள்கின்றாயே! என்று அவதானி கூறுகின்றார். சங்கடங்கள் எதுவும் வராது, தாய் சொல்லைக் கேள், தப்பொன்றுமில்லை என்று அவள் பதிலளிக்கின்றாள். திருமணத்தால் ஏதோ பிரச்சனை வர இருக்கின்றது என்பதை இவ்விடத்தில் குறிப்பாக ஆசிரியர் காட்டுகின்றார். இப்படிக் காட்டாயப்படுத்தித் திருமணத்திற்குச்சம்மதிக்க வைக்கின்றாளே தாய், இதனால் பிரச்சனை ஏதும் உண்டாகுமோ? என்ற ஆர்வ நிலையும் இங்கு எழுகின்றது. தாய் மனங்கலங்காமல் இருக்க அப் பெண்ணையே திருமணம் செய்து கொள்கிறார் அவதானி.

திருமணத்திற்குப் பின் அவதானி எண்ணியிருந்ததை மெய்ப்பிக்கும் வகையில் தான் மனைவி பலாமுருடு நடந்துகொண்டாள். கணவனிடம் அன்பாக நடந்துகொள்ள மாட்டாள். மாமியாரோடு சண்டையிட்டுக் கொண்டேயிருப்பாள். தாய்க்கும் மனைவிக்கும் இடையில் எதுவும் சொல்ல முடியாது அல்லல்படுகின்றார் அவதானி. விதியை நினைத்து வருந்துகிறார்.

**"பத்தா வுயிரறுக்கும் பாதகி யென்றழுவார்**
**நித்தங் கொடுமைபுரி நீலியே யென்றழுவார்**
**மனங் கொதிக்க வைத்தாளே மாபாவியென்றழுவார்**
**இனமென்ன செய்வாளோ வேழையே னென்றழுவார்**
**ஈரமற்ற பாவி விரக்கமற்ற சண்டாளி**
**தாரமென வந்த சதிகாரி யென்றழுவார்"**
***(ஆ.அ.சரிதம் ப.67)***

என்று மனைவியால் அவதானி படும் துயரங்களை ஆசிரியர் கூறுகின்றார். மனைவியை "தாரமென வந்த சதிகாரி" என்கிறார்.

பெற்றோர்கள் பார்த்து வைக்கும் பெண்ணைத்தான் திருமணம் செய்ய வேண்டும் என்ற மரபான கட்டாயத் திருமணம்தான் அவதானியின் திருமணம். பெற்றோர்களின் மனம் சங்கடப்படக் கூடாது என்பதற்காகவே பிள்ளைகள் திருமணத்திற்குச் சம்மதிக்கின்றனர். பெற்றோர்களின் அதிகாரத்திற்குப் பிள்ளைகள் பணிந்து செல்கிறார்கள் என்றும் கூறலாம். பிள்ளைகளின் விருப்பத்தைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. இக்கட்டாய மரபுத் திருமணத்தினால் அவதானிபடுகின்ற துயரங்களையும் காண்கிறோம். அவதானியைப் போன்று

எத்தனையோ பேர் கட்டாயத் திருமணத் தினால் சமுதாயத்தில் தவிக்கின்றனர்.

மகனின் உபநயனத்தை முடித்துவிட்டுச் சென்னைக்குத் திரும்பும் அவதானியின் வாழ்வில் திருப்பம் ஏற்படுகிறது. சத்திரிய குலக் கைம்பெண்ணான தேவதத்தையைச் சந்திக்கிறார். இருவரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துகொள்கின்றனர். இருவருமே வாழ்க்கையில் பாதிக்கப்பட்டவர்கள் என்பதால் ஒருவருக்கொருவர் இரக்கம் காட்டுகின்றனர். இருவரும் பல இலக்கியங்களைக் கற்று கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். மனைவி தன்னிடம் அன்பான வார்த்தைகள் பேசி அறியாதவர் அவதானி. தேவதத்தையின் அன்பான வார்த்தைகள் அவள் மீது காதல் கொள்ளச் செய்தன. தன் குழந்தைகளையும் அவள் குழந்தைகள் போல் பாவித்து நடத்தி வந்ததால் அவளிடத்தில் அவருக்கு மேலும் அன்பு வளர்கிறது.

**"தன்னை யறியாமல் தானவளைக் காதலித்தார்**
**அன்னமு மவ்வாறே யையர்மே லாசை கொண்டார்**
**ஒருவர் மனதை யொருவர்க்குச் சொல்லாராம்**
**இருவரு முள்ளே யெரியின்மெழு காவாராம்"**

***(ஆ.அ.சரிதம் ப.76)***

உள்ளத்தால் இருவரும் ஒன்று பட்டவரானார்கள். உலகம் பழித்தாலும், உற்றார் துறந்தாலும், இதனால் கலகம் விளைந்தாலும், கண்டோர் நகைத்தாலும் உமக்கு நான் அடிமை. ஒரு நாளும் நான் மறவேன் என்று உறுதியளிக்கின்றாள் தேவதத்தை. "கூடு பிரிந்தாலும் கூட்டுப் பிரியாது" என்று பதிலளிக்கின்றார் அவதானி. புவியிலே தம்போலப் புத்தவர்கள் இல்லையென்று, இருவரும் இனிதே நாட்களைக் கழிக்கின்றனர். அவதானிக்குக் காலில் முள் குத்துகின்றது. சீழ்ப்பிடித்து நோயால் அவதிப்படுகின்றார். சிகிச்சைக்க ாகத் தேவதத்தையை அழைத்துக் கொண்டு கிராமத்திற்கு வருகின்றார். கிராமத்தவர் தேவதத்தையை திட்டுகின்றனர். நோய் தேவதத்தையால் வந்தது என்று உறவினர்கள் கூறுகின்றனர். தேவதத்தையைச் சென்னைக்கு அனுப்பி வைத்துவிடுகின்றார். உறவினர்களும், மற்றவர்களும் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தெரிவிக்க அவர்களின் காதல் வலுப்பெறுகின்றது. இப்பகுதியில், பிரிந்த காதலர்கள் ஒன்று சேர்ந்தார்களா? திருமணம் செய்து கொள்வார்களா? சமுதாயம் விதவை மறுமணத்தை ஏற்றுக் கொண்டதா? இறுதி வரை காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த தாய் முடிவில் என்ன செய்கிறாள்? என்ற பல கேள்விகளை எழ வைத்து, வாசகர் மத்தியில் ஆர்வநிலையை நிகழ்ச்சிப் பின்னலில் ஏற்படுத்திவிடுகின்றார் சேஷையங்கார்.

அவதானியின் மகள் திருமணத்தில் பிரச்சனைகள் ஏற்பட்டுப் பின் தேவதத்தையால் நடந்தேறுகிறது. அதுவரை "வைப்பாட்டி" என்று சொல்லி வம்பு பேசிய சமுதாயத்தினர்

**"அவதானி தேவதத்தை யன்பிற்கு வேறுவமை**
**புவனத்தி லில்லையென்று பேசியவர் போனார்கள்."**

***(ஆ.அ.சரிதம் ப.103)***

அவர்களன்பிற்கு வேறு உவமை புவனத்தில் இல்லையென்று பேசிச் செல்கிறார்கள். சமுதாயத்தினர் ஏற்றுக் கொண்ட போதிலும், தாய் காந்தாரியால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஊராரும், தாயும் பேசுவதைத் தடுக்க வேண்டுமெனில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றெண்ணுகிறார் அவதானி.

**"நன்றாய் மறையுணர்ந்த நல்லவர் கையாலே**
**வேதியர் கையால் விவாகச் சடங்கிழைத்தே**
**ஆதியுராரும் அரிவை கழுத்தினிலே**
**மங்கல மாகுநல்ல மாங்கலியந் தான்முடித்தார்"**

***(ஆ.அ.சரிதம் ப.110)***

தேவதத்தை அவதானியின் காதல் திருமணத்தில் முடிகின்றது. தாயும் மற்ற உறவினர்களும் மனம் திருந்துகின்றனர்.

**"கோலமகனு மந்தக் கொம்பனையைத் தான்மணந்தான்**
**சாதிவிட்ட சாதியென்று தள்ளலினி வாய்க்காது**
**புவனத்திதுவும் புதுமையாய் விட்ட திப்போ." (ஆ.அ.சரிதம் ப.111)**

என்று கால மாற்றத்தைக் கூறுகின்றார் சேஷையங்கார். பழமைக்கும் புதிய மாறுதலுக்குமான மோதலை இங்கு காணமுடிகிறது. பழமை வாதிகளுக்குப் புதிய மாறுதலை ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளத் தயங்கினாலும் காலத்தியற்கை கருதி முடிவில் ஏற்றுக் கொள்வதையும் காணமுடிகிறது. நம்பிக்கை, நம்பிக்கைத் துரோகம், தீண்டாமை-சமத்துவம், மரபுத் திருமணம், காதல் ஆகிய இம்மூன்று முரண் இழைகள் இணைந்து கதையை இயக்கிச் செல்லுகின்றன. சிந்தனை சார்பான இவ்வெதிர் எதிரான நிகழ்வுகளைக் கதைப் பின்னலாக அமைத்து கதைக்கு நடப்பியல் பாங்கை ஆசிரியர் ஏற்படுத்தியிருக்கின்றார்.

நிகழ்ச்சிப் பின்னலும், நடப்பியலும் (ஆதியூர் அவதானி சரிதம் தோன்றிய காலச்சூழல் (1875)) அன்றாட வாழ்க்கையின் அனுபவங்களை, சமகால நிகழ்ச்சிகளை, சமகால மொழியில் உள்ளதை உள்ளவாறு புனையும் தன்மையுடைய நடப்பியலாகும்.2 மனிதனுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையே ஏற்படுகின்ற மோதலை அடிநிலையாகக் கொண்டதே நாவல் என்ற கருத்து இங்கு நோக்கத்தக் கதாகும். சமூக மாற்றத்தினால் மரபுகள் சில மதிப்பிழந்து போகின்றன. புதுமைகள் பல செல்வாக்குப் பெறுகின்றன. சமூகம், குடும்பம் என்ற அமைப்புகளுக்குள் தனித்துவ மிழந்து, அதையும் உணராது வாழ்ந்திருந்த முதிய தலைமுறை மனிதர்களுக்கு மாறாக, தன் விருப்பு வெறுப்புகளுக்கும் உரிமைகளுக்கும் முதலிடம் தரக்கூடிய, தனித்துவம் உணர்ந்த, புதிய இளைய தலைமுறை உருவாகின்றது. பழைய சமூக மதிப்புகளுக்கும் புதிய சமூக மதிப்புகளுக்கும் இடையே சிக்கிக் கொண்ட இப்புதிய தலைமுறை தங்களுக்குள்ளும், சமூகத்தோடும் கொள்ளும் முரண்பாட்டிலும் தனி மனிதர்களாகின்றனர். மனிதனுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையேயான முரண்பாட்டில் தனிமனிதன், தன்னைச் சமூக மதிப்பில் தக்க வைத்துக் கொள்ளப் போராடுகிறான். அவனுடைய வீழ்ச்சியும், எழுச்சியும், தவறுகளும், சாதனைகளும் கொண்டதாக நிகழ்ச்சிப் பின்னல் அமைகின்றபோது அப்படைப்பு நடப்பியல் பாங்கு பெற்றுவிடுகின்றது.

இந்தியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டத்தில் பல சமுதாய சமயச் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றி வளர ஆரம்பித்தன. பல சமுதாய சமயச் சீர்திருத்தவாதிகள் அறிவு, ஆன்மீக உணர்ச்சி அடித்தளங்களை அமைத்துக் கொடுத்தனர். இச்சீர்திருத்தவாதிகளுக்கு முன்னோடியாக விளங்கியவர் இராசாராம் மோகன்ராய் ஆவார். உடன் கட்டையேறும் வழக்கத்துக்கு எதிராகப் போர்தொடுத்தார். அக்கால கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங் பிரபுவினால் கி.பி.1829இல் உடன்கட்டை ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்படுகிறது.3 இராசாராம் மோகன்ராய் பகுத்தறிவு சமூக சீர்திருத்தத்தின் அடிப்படையில் பிரம்ம சமாஜம் (ஒரே கடவுள் சங்கம்) என்ற அமைப்பைத் தொடங்குகிறார். இவருக்குப் பின் தேவேந்திரநாத் தாகூர் பல சீர்திருத்தங்களைச் செய்கிறார். இவரின் சீடரான கேசவ சந்திரசென் பல சீர்திருத்தங்களை மேற்கொள்கிறார். "இந்தியன் ரிபார்ம் அஸோஸியேஷன்" ((Indian Reform Association) என்னும் ஓர் அமைப்பையும் நிறுவி, பெண் கல்வி, தொழிலாளர் கல்வி, மதுவிலக்கு ஆகியவற்றின் பிரச்சாரத்துக்கு ஊக்கமளிக்கின்றார். ஆத்மாராம் பாண்டுரங்கா, சுவாமி தயானந்த சரஸ்வதி போன்றோர் சாதிமுறை, தீண்டாமை, குழந்தைத் திருமணம் போன்றவற்றிற்கு எதிராகவும், விதவை மறுமணம், பெண் கல்வி போன்றவற்றை

ஆதரித்தும் போராடுகின்றனர். வங்காளத்தைச் சேர்ந்த பண்டிதர் ஈஸ்வர சந்திர வித்யாசாகர், எம்.பி. மலபாரி போன்றோர் விதவைகள் மறுமனம் பற்றிய சமூக சீர்திருத்த இயக்கத்தின் முன்னோடிகளாகப் புகழ் பெற்றனர்.[4]

இத்தகைய போக்குகளின் பின்னணியில், தமிழகத்தில் திரு. சீனிவாசப்பிள்ளை தமது கொள்கை வழிப் பணியாற்ற "இந்து முற்போக்கு மேம்பாட்டுச் சங்கத்தை" (Hindu Progressive Improvement Society) நவம்பர் 1852இல் அமைக்கின்றார். விதவை மறுமணம், பெண் கல்விக்கு ஆதரவு, தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம் முதலான வேலைத் திட்டங்களை இந்த சங்கம் மேற்கொண்டது. இவரின் மறைவுக்குப் பிறகு திரு.வெங்கட்ராயலு நாயுடு இதைத் தொடர்ந்து நடத்தினார். "விதவை மறுமணச் சட்டம்" இயற்ற அன்றைய ஆட்சியாளரிடம் வேண்டினார்.[5] இது போன்ற சமுதாயச் சீர்திருத்தவாதிகளின் பிரச்சாரத்தின் பயனாக ஆங்கில அரசால் 1865ஆம் ஆண்டு "இந்து விதவை மறுமணச் சட்டம்" கொண்டுவரப்படுகிறது.[6] எனினும், சீர்திருத்தவாதிகளின் முயற்சி முழு வெற்றியைப் பெறவில்லை. விதவை மறுமணம் நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாகவே இருந்தது.

1873இல் நாகர்கோயிலைச் சேர்ந்த சேஷையங்கார் என்னும் வழக்கறிஞர் "Madras Hindu Widow Marriage Association" என்பதை நிறுவினார். தனது விதவை மகளை மறுமணம் செய்வித்த இவர், சாதி ஆசாரத்தை மீறிவிட்ட குற்றத்திற்கு ஆளானார்.[7]

இதுபோன்று சீர்திருத்தச் சங்கங்களும், பல சட்டங்களும் நிறைவேற்றப்பட்ட காலகட்டத்தில் தோன்றியதுதான் "ஆதியூர் அவதானி சரிதம்". கலப்பு மணமும் விதவை மணமும் ஒன்று சேர்ந்த புதுமையை 1875இல் தம் கதையில் செயல்படுத்திக் காட்டுகிறார் சேஷையங்கார்.

1. ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்பட்ட கல்விப் பரவல், 2. சமூக உறவு முறைகளில் இருந்து சில மதிப்பீடு தோன்றியமை, 3. புதிய பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்ட சூழல், 4. பழைய சாதீய அமைப்பு சார்ந்த கட்டமைப்பு மாறி வரும் நிலை, 5. புதிய சூழலில் (கால மாறுதலில்) ஏற்பட்ட தனிநபர் சிக்கல்கள் ஆகியவை இக்கதையில் ஆசிரியரால் பதிவு செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் விதவை மறுமணத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறார். மேலும், இவர் இக்கதையின் முன்னுரையில்,

"இதிலடங்கிய சங்கதிகள் பல இந்துக் குடும்பங்களில் இக்காலத்திலுள்ளவைகள் தாம். ஆதலால் இது பொய்ப் பெயர் புண்டு மெய்ப்பொருள் காட்டும்"[8]. என்று கூறுகிறார். தேவதத்தையின் மறுமணத் திற்கு அதே காலகட்டத்தில் நடந்த விதவை மறுமணத்தை எடுத்துக் கூறுகிறார்.

> **"நெல்வேலிச் சேஷையங்கார் நேயமுள்ள புத்திரிக்குச்**
> **சொல்லு மறுமணந்தான் தோஷமில்லையென்று செய்தார்" (ஆ.அ.சரிதம், ப.iii)**

என்று வழக்கறிஞராக இருந்த சேஷையங்கார் இரண்டாண்டுகளுக்கு முன்பு தம் மகளுக்குச் செய்வித்த மறுமணத்தை உதாரணமாகக் காட்டுகின்றார். ஆக, சமகால நிகழ்ச்சிகளையே தம் கதையில் சேஷையங்கார் கூறியுள்ளார். மேலும்,

> **"கைம்பெண் விவாகமிந்தக் காலத்திலுண்டாச்சு**
> **அம்புவி யெங்கு மதுவே தலையெடுக்கும்**
> **காலத்தியற்கை தனைக் கட்ட முடியாது**
> **சாதிவிட்ட சாதியென்று தள்ளலினி வாய்க்காது"**
>
> ***(ஆ.அ.சரிதம் ப.111))***

என்றெல்லாம் அறுதியிட்டுக் கூறுவது தான் கதையின் கருத்தமைப்பு நிலைகளாக அமைகின்றன. கதையின் பொருண்மை சேஷையங்கார் காலத்தைச் சார்ந்தது. ஆக, கதையின் பொருண்மை பழைய

கதைகளைப் போன்று வரலாற்றுக் காலங்களை மீறியதல்ல. எனவே, இச்செய்யுள் கதையின் கருத்தமைப்பு நிலை கால மாறுதலுக்கேற்ப அமைந்து நடப்பியல் பண்பை உருவாக்குகின்றது.

"காவியத்தையும் நாவலையும் வேறுபடுத்துவது உரைநடை ஒன்று மட்டுமே என்பது எவ்வாற்றானும் ஏற்புடைத்தன்று"[9] என்று கூறும் கைலாசபதி பின்வரும் கூற்றையும் கூறுகின்றார்.

"காவியம் நாவலினின்று வேறுபடுவது பொருளடக்கத்தாலுமாகும். பொருள் வேறுபாடே முக்கியமானது என்று கூடக் கூறுதல் ஏற்புடையதாகும். இப்பொருள் வேறுபாடு மாறுபட்ட சமுதாய அமைப்பினைப் பிரதிபலிப்பதாகும்"[10] என்கிறார். ஆக ஆதியுர் அவதானி சரிதம் செய்யுள் மொழியைக் கொண்டிருந்தாலும், மாறுபட்ட சமுதாய அமைப்பைப் பிரதிபலிப்பது இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

**அடிக்குறிப்பு**

1. Michael J.Hoffman, Essentials of the theory of fiction p.135 (There are thus, plots of action, plots of character and plots of thought) வெ. சாரதாம்பாள், சங்கச் செவ்வியல். ப.276
2. க.வெங்கடேசன், விடுதலைப் போராட்ட வரலாறு, ப.48
3. கவிஞர்களின் பேருரைகள், சிந்தனைப் பண்ணையில் பாரதி, ப.20
4. மேலது, ப.26
5. கலைக்களஞ்சியம், தொகுதி ஒன்பது ப.67
6. கவிஞர்களின் பேருரைகள், மு.நூ. ப.26
7. சேஷையங்கார், ஆதியுர் அவதானி சரிதம், ப.ஓஔை
8. க. கைலாசபதி, நாவல் இலக்கியம், ப.3
9. க. கைலாசபதி, நாவல் இலக்கியம், ப.7

**பார்வை நூல்கள்**


| | |
|---|---|
| கைலாசபதி, க.<br>கோ.சந்தனமாரியம்மாள் | தமிழ் நாவல் இலக்கியம், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, 1999<br>ஆதியுர் அவதானி சரிதம் கதைக் கவிதையா? புதினமா? விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர், முதற்பதிப்பு - ஜனவரி 2020 |
| தசாரதாம்பாள், செ. | செவ்வியல், ஐந்திணைப்பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு-1988 |
| தண்டாயுதம், இரா. | சமூக நாவல்கள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, மூன்றாம் பதிப்பு-1979 |
| வீராசாமி, தா.வே. | தமிழ் நாவல் இயல், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, முதற்பதிப்பு-1986 |
| ராசு, தா. | நாவல்களில் பாத்திரப்படைப்பு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு-1987 |
| வெங்கடேசன், க. | இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, ஜே.ஜே.பப்ளிஷர்ஸ், சென்னை, 1995 |
| Michael J.Hoffman<br>Patrick D.Murphy | Essentials of the theory of fiction, Duke University Press, London, Third Print – 1993 |